DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

RADHAPURAM

| | | | |
|---|---|---|---|
| Calender | .. | .. | |
| Miscellaneous | .. | .. | |
| Preliminary Register | .. | .. | CC.No.329/2020 |
| Sessions | .. | .. | |

Deposition of Witness for Prosecution PW –8

| | | |
|---|---|---|
| Name | : | Saravanakumar |
| Father/Husband's Name | : | Chellappan |
| Village | : | Ponmanai |
| Taluk | : | Kalkulam |
| Caste | : | SC |
| Calling | : | Doctor |
| Religion | : | Hindu |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 on the 19th day of October 2022.

**முதல் விசாரணை** :-

நான் தற்போது பொன்மனையில் வசித்து வருகிறேன். நான் ஆசாரிபள்ளத்தில் உள்ள அரசு மருத்துவமனை மருத்துவகல்லுரியில் உதவி மருத்துவராக வேலை பார்க்கிறேன். கடந்த 10-08-2017 அன்று இரவு 10.00 மணிக்கு நான் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது திருநெல்வேலி மாவட்டம், செட்டிகுளத்தில் 10-08-

2017 இரவு 7.30 மணிக்கு நடந்த சாலை விபத்தில் காயம் பட்டதாக சொல்லப்பட்ட செட்டிகுளம் வேதகோவில் தெருவை சேர்ந்த சுப்பிரமணிய நாடார் மகன் ஆறுமுக நாடார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார் அவரை பரிசோதித்த போது அவர் இறந்து போய் இருந்தார். எனவே அவருடைய பிரேதத்தை மேற்படி மருத்துவமனையில் சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். இறப்பு குறித்து தகவல் அறிக்கை அனுப்பினேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

காயம் பட்ட நபர் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு நான் அவரை பரி சோதனை செய்த போது அவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்த போன அழைத்து நபரிடம் இந்த மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கு முன்னால் வேறு எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்ற விபரத்தை அழைத்து வந்த நபரி டம் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. நான் பிரசோதனை செய்த நப்ர எவ்வளவு நேரத்திற்கு முன்பு இறந்தா்ர என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. அந்த நபரை நான் பிரசோதித்த போது நான் முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான அறிகுறிகள் காணப்பட்டதா என்றால் என்னால் தற்போது அதை உறுதியாக கூற இயலாது. இறந்து போன நபருக்கு சரியான சிகிச்சை அளிப்பட்திருந்தால் அவர் உயிர் பிழைத்திருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

(ஓம்)/– மு. ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ராதாபுரம்.